குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.40/2009

அ.சா.4

2024–ம் ஆண்டு அக்டோபர் 24–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | கன்னுசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.50 மணி,

Accused A1. Balakrishnan, A5.Subramani, A6.Rathinavel, A7.Sivaraj @ Yuvaraj present. A2.Govindammal Absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.K.Sivakumar present for Advocate Mr.R.Dhanasekar for present accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பன்னப்பட்டியில் குடியிருந்து, நெசவுத் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2006 ஆம் ஆண்டு, ஒரு நாள் மதியம் பன்னப்பட்டி பிரிவிற்கு டீ சாப்பிட வந்தேன். அப்போது போலிசார் சாமிநாதனுக்கு சொந்தமான ஜவுளிக் கடைக்கு முன்பாக இருந்தார்கள். பொதுமக்களும் கூட்டமாக இருந்தார்கள். நான் அருகில் சென்று பார்த்தபோது, அந்த கடையின் ஷட்டரை உடைத்து திருட்டு நடந்ததாக சொன்னார்கள். பின்பு, மாதிரி வரைபடம் வரைந்ததற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் என்னுடைய கையெழுத்து இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. சம்பவ இடத்தில் நடந்த திருட்டு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. அ.சா.1 சாமிநாதன் எனக்கு பழக்கமானவர், எனது உறவினர் அல்ல. போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எழுதிய தாளில்

தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் எனது கையெழுத்து இல்லை என்றால் சரி. போலிசார் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. என்னுடன் கையெழுத்திட்ட நபரின் பெயர் சண்முகம் என்று எனக்கு தெரியும். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாமிநாதன் எனக்கு அறிமுகமானவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.59 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.